# முதுகலை முதலாமாண்டு - தமிழ் இலக்கியம்

## தொல்காப்பியம் - சொல்லதிகாரம் : இரண்டாம் பருவம்

பாடக்குறியீட்டு எண் - 18MTA22C

## அலகு - 5 - இயல் 9 - எச்சவியல்

முனைவர் ரா. மகாலட்சுமி
உதவிப்பேராசிரியர்.

# இயல் - 9 - எச்சவியல்

கிளவியாக்கம் முதல் உரியியல் ஈறாக உள்ள இயல்களில் கூறாமல் எஞ்சி நின்ற, சொல்லின் இலக்கணங்களைத் தொகுத்துக் கூறுவதால் எச்சவியல் எனப்பெயர் பெற்றது. பத்து வகை எச்சம் பற்றிக் கூறுவதால் எச்சவியல் எனப்பட்டது. செய்யுளுக்குரிய சொல், அவற்றின் இலக்கணம், செய்யுளில் ஏற்படும் விகாரம், பொருள்கோள் போன்றவை இவ்வியலில் கூறப்பட்டுள்ளன.

## செய்யுளுக்குரிய சொற்கள்

1. இயற்சொல் 2. திரிசொல் 3. திசைச்சொல் 4. வடசொல் எனச் சொற்கள் நான்கு வகைப்படும். இவை செய்யுள் இயற்றுவதற்கு உரியவை.

## இயற்சொல்

இயற்சொல் செந்தமிழ் பேசும் மக்களின் இயல்பான வழக்காகும். இவை எவ்வித தடுமாற்றமும் இன்றித் தெளிவாகப் பொருள் விளங்கும் இயல்பினை உடையன.

## திரிசொல்

ஒரு பொருளைக் குறித்து வரும் பல சொற்களும், பல பொருளை குறித்து வரும் ஒரு சொல் எனத் திரிசொல் இரண்டு வகைப்படும்.

## திசைச்சொல்

செந்தமிழ் வழங்கும் தமிழ்நாட்டைச் சார்ந்த நாடுகள் பன்னிரண்டு. அங்கு வாழும் மக்களுக்கு மட்டுமே பொருள் விளங்குமாறு வழங்கும் சொற்கள் திசைச்சொற்கள். அந்தந்தப் பகுதிகளில் வழங்கப்படும் சொற்கள் அந்தந்தப் பகுதியில் வாழும் மக்களுக்கு மட்டுமே பொருள் விளங்கும்.

## வடசொல்

வடசொல் என்பது வடமொழிக்குரிய சிறப்பெழுத்துக்களால் அமையாமல், வடமொழிக்கும் தமிழுக்கும் பொதுவாக வரும் எழுத்துக்களால் ஆகி தமிழில் வழங்கப்படும் சொல்.

வடமொழிக்குரிய சிறப்பெழுத்துகளால் அமைந்த வடசொற்கள் சிதைந்து வந்து தமிழில் வழங்கப்படுவதும் உண்டு. அவற்றுள் பொருத்தமானவற்றை ஏற்றுக் கொள்வர்.

## செய்யுள் விகாரம்

இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் எனும் நான்கு வகை சொற்களாலும் செய்யுள் இயற்றப்படும். அப்போது செய்யுளின் இன்பத்திற்காக 1. வலித்தல், 2. மெலித்தல், 3. விரித்தல், 4. தொகுத்தல், 5. நீட்டல், 6. குறுக்கல் எனும் ஆறு மாற்றங்கள் செய்யப்படும். இது விகாரம் எனப்படும்.

## பொருள்கோள்

செய்யுளில் அமைந்த சொற்களைப் பொருளுக்கு ஏற்ப மாற்றியமைத்துப் பொருள் கொள்ளும் முறைக்குப் பொருள்கோள் என்று பெயர். இது 1. நிரல்நிறை, 2. சுண்ணம், 3. அடிமறி, 4. மொழிமாற்று என நான்கு வகைப்படும்.

### 1. நிரல்நிறைப் பொருள்கோள்:

சொற்களை (பெயர், வினை) ஒரு வரிசையாகவும் அவை கொள்ளும் பொருள்களை மற்றொரு வரிசையாகவும் நிறுத்திப் பொருள் கொள்ளும் முறை நிரல்நிறைப் பொருள்கோள் எனப்படும். வரிசையாக நிறுத்திப் பொருள் கொள்வதால் நிரல்நிறை.

(எ.கா) கொடி குவளை கொட்டை நுசுப்பு உண்கண் மேனி.

### 2. சுண்ணப் பொருள்கோள்

இரண்டு அடிகளில் இயல்பாக அமைந்த எட்டுச் சீர்களையும் தனித்தனியே பொருளுக்கு ஏற்ப (முன்னும் பின்னும்) மாற்றியமைத்துப் பொருள் கொள்வது சுண்ணப் பொருள்கோள் எனப்படும்.

(எ.கா) "சுரையாழ அம்மி மிதப்ப வரையனைய
யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப
கானக நாடன் சுனை"

### 3. அடிமறி பொருள்கோள்

செய்யுளில் சீர்கள் நின்ற நிலையில் நிற்க, அடிகளை முன்னும் பின்னும் மாற்றி அமைத்துப் பொருள் கொள்வது அடிமறி பொருள்கோள் எனப்படும்.

(எ.கா) காலங்களில் அவள் வசந்தம்
மலர்களில் அவள் மல்லிகை
மாதங்களில் அவள் மார்கழி.

இப்பாடலை எந்த வரிசையில் மாற்றிப் பொருள் கொண்டாலும் பொருள் மாறுவதில்லை.

### 4. மொழிமாற்றுப் பொருள்கோள்

செய்யுளில் முன்னும் பின்னுமாக மாறி நிற்கும் சொற்களைப் பொருளுக்குப் பொருந்தும்படி தேவையான இடத்தில் மாற்றி அமைத்துப் பொருள் கொள்வது மொழி மாற்றுப் பொருள்கோள் எனப்படும்.

(எ.கா) ஆரியமன்னர் பறையின் எழுந் திரும்பும்
பாரி பறம்பின்மேல் தண்ணுமை - காரி
விறலன் முன்னூர் வேங்கைவீ தான்நாளும் தோன்றான்
நிறனுள்ளூர் உள்ளது அவர்.

இதனைப் பொருளுக்கு ஏற்ப மாற்றிப் பொருள் கொள்ள வேண்டும்.

# தொகைச்சொற்கள்

## 1. பிரிக்கப்படாதவை :

த, ந, நு, எ எனும் எழுத்துக்களை முதலாக உடைய உறவுப் பெயர்களைப் பகுதி, விகுதி எனப் பிரித்துப் பொருள்கொள்ள இயலாது.

## 2. ஒரு சொல் அடுக்கி வருதல்

1. இசைநிறை, 2. அசைநிலை, 3. பொருளொடு பொருந்தி வருதல் எனும் மூன்று வகைகளிலும் ஒரு சொல் ஒன்றுக்கு மேல் அடுக்கி வரும். இது அடுக்குத்தொடர் எனப்படும்.

## தொகை மொழிகள்

1. வேற்றுமைத் தொகை, 2. உவமைத்தொகை, 3. வினைத்தொகை, 4. பண்புத் தொகை, 5. உம்மைத்தொகை, 6. அன்மொழித் தொகை என தொகை மொழி ஆறு வகைப்படும்.

### 1. வேற்றுமைத் தொகை

சொற்களுக்கிடையே வேற்றுமை உருபுகள் மறைந்து நின்று, வேற்றுமைத் தொடரைப் போல வேற்றுமைப் பொருளை உணர்த்துவது வேற்றுமைத் தொகை எனப்படும்.
(எ.கா) நிலங்கடந்தான்.

### 2. உவமைத் தொகை

உவம உருபுகள் மறைந்து வருவது உவமைத்தொகை.
(எ.கா) புலிப்பாய்ச்சல்.

### 3. வினைத் தொகை

காலத்தைக் காட்டும் சொற்கள் மறைந்து வருவது வினைத்தொகை. வினைத்தொகை மூன்று காலத்திற்கும் நிற்கும்.
(எ.கா) கொல்யானை, அடு சோறு.

### 4. பண்புத் தொகை.

நிறம், வடிவம், அளவு, சுவை எனும் பண்புகளையும் இவை போன்ற பிற பண்புகளையும் உணர்த்தும் சொற்கள் மறைந்து வருவது பண்புத்தொகை.
(எ.கா) கருங்குதிரை, வட்டப் பலகை.

### 5. உம்மைத் தொகை

1. இருபெயர், 2. பலபெயர், 3. அளவுப் பெயர், 4. எண்ணியற்பெயர், 5. நிறைப்பெயர், 6. எண்ணின் பெயர் எனும் அறுவகைப் பெயர்களிலும் உம்மைத்தொகை பொருந்தி வரும்.
(எ.கா) உவாப் பதினான்கு, சேர சோழ பாண்டியர், தூணிப்பதக்கு

## 6. அன்மொழித் தொகை

பண்புத் தொகை, உம்மைத் தொகை, வேற்றுமைத்தொகை ஆகிய மூன்றினையும் நிலைக்களமாகக் கொண்டு அவற்றின் புறத்தில் அமைந்து தன் பொருளை உணர்த்துவது அன்மொழித்தொகை.
(எ.கா) வெள்ளாடை, பொற்றாலி

## தொகைச் சொற்களில் பொருள் நிற்கும் இடம்

ஆறுவகையாகக் கூறப்பட்ட தொகைச் சொற்களில் 1. முன்னும், 2. பின்னும், 3. இரு சொற்களிலும், 4. பிற மொழி மேல் என நான்கு இடங்களில் பொருள் நிற்கும்.
(எ.கா) வேங்கைப்பூ, அடைகடல்.

## தொகை மொழிகளின் இயல்பு

தொகைச் சொற்கள் ஒன்றுக்கு மேற்பட்ட சொற்களால் ஆனவை. ஆனாலும் அவை பிரிந்து நிற்காமல் ஒரே சொல்லாய் நின்று பொருள் தரும் தன்மையுடையன. (எ.கா) மதிமுகம்.

- உயர்திணையில் வரும் உம்மைத்தொகைச் சொல் பலர்பாலுக்குரிய இறுதியைக் கொண்டு முடிந்து விடும். (எ.கா) கபிலபரணர்.
- வராத இயல்புடையவற்றை வருவனவாகவும் பேசாத இயல்புடையவற்றைப் பேசுவனவாகவும் கூறுவர். இவ்வாறு கூறப்படுவனவும், அவை போன்ற பிறவும் அந்தந்தப் பொருட்களின் இயல்பினைக் குறிப்பாக உணர்த்துவன.
(எ.கா) இவ்வழியே சென்றால் மதுரை வரும்.
- இசைநிறை அடுக்கு: ஒன்றுக்கு மேல் அடுக்கி வரும் என முன் கூறப்பட்ட இசைநிறைச் சொற்கள் நான்கு முறை வரை அடுக்கி வரும்.
(எ.கா) பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோ.
- விரைச்சொல் அடுக்கு: விரைவுப் பொருள்பட அடுக்கி வரும் விரைசொல் மூன்று முறை அடுக்கி வரும். (எ.கா) பாம்பு, பாம்பு, பாம்பு.
- அசைநிலை அடுக்கு: கண்டீர், கொண்டீர், சென்றீர், போயிற்று எனும் வினைச்சொற்கள் இறுதியில் வினா எழுத்துக்களைப் பெற்று வந்தால் அசைநிலையாக வரும். (எ.கா) கண்டீரோ, கண்டீரோ, கண்டீரோ, கொண்டீரோ

• கேட்டை, நின்றை, காத்தை, கண்டை, எனும் நான்கு முன்னிலைச் சொற்களும் முன்னிலைப் பொருள் உணர்த்தாமல் வரும் போது மேற்கூறிய சொற்களைப் போல அசைநிலைகளாக வரும்.

## முற்றுச் சொற்கள்!

• முற்றுச்சொல் 1. மூன்று காலத்தையும் காட்டும், 2. மூன்று இடங்களிலும் வரும், 3. உயர்திணை, அஃறிணை, விரவுத்திணை ஆகிய பொருள்களில் தெரிநிலைவினை, குறிப்புவினை எனும் இரண்டாகவும் வரும். தன்மை, முன்னிலை படர்க்கை எனும் மூவிடங்களிலும் குறிப்பு வினை எனும் இரண்டு நிலைகளிலும் வரும். அறுவகைச் சொற்களும் முற்றுச்சொல் எனப்படும்.

• தன்மை, முன்னிலை, படர்க்கை எனும் மூவிடங்களிலும் தெரிநிலையாகவும், குறிப்பாகவும் காலம் காட்டுவது முற்றுச்சொல்லாகும். மேற்கூறிய இவ்விதியினுள் அடங்காமல் பிற இடங்களில் வரும் முற்றுச் சொற்களும் உண்டு.

• வினைமுற்றுச் சொற்கள் ஒன்றுக்கு மேற்பட்டவை அடுக்கி வந்தாலும் இறுதியில் ஒரு பெயரைக் கொண்டே முடியும்.
(எ.கா) உண்டான், தின்றான்.

## எச்சங்களின் வகைகள்

ஒரு சொல்லைக் கொண்டு முடிவதற்காக எஞ்சி நிற்கும் சொல் அல்லது தொடர்மொழி எச்சம் எனப்படும். 1. பிரிநிலை, 2. வினை, 3. பெயர், 4. ஒழியிசை, 5. எதிர்மறை, 6. உம்மை, 7. என, 8. சொல், 9. குறிப்பு, 10. இசை என எச்சம் 10 வகைப்படும்.

## 1. பிரிநிலை எச்சம்

பிரிக்கப்பட்ட பொருளைக் கொண்டு முடியும் எச்சம் பிரிநிலை எச்சம் எனப்படும். இது ஏகாரப் பிரிநிலை, ஓகாரப் பிரிநிலை என இரு வகைப்படும்.
(எ.கா) அவனே கொண்டான், அவனோ கொண்டான்.

## 2. வினையெச்சம்

தெரிநிலை வினையையும், குறிப்பு வினையையும் முடிக்கும் சொல்லாகப் பெற்று வருவது வினையெச்சம். வினையெச்சம் குறிப்பு வினையைக் கொண்டு முடிந்து வரும் போது ஆக்கச் சொல் பெற்று வரும்.
(எ.கா) உழுது வந்தான், நல்லன், ஆயினான்.

## 3. பெயரெச்சம்

பெயரைக் கொண்டு முடிந்து வருவது பெயரெச்சம் ஆகும்.
(எ.கா) உண்ட சாத்தன், உண்ணும் சாத்தன்.

## 4. ஒழியிசை எச்சம்

ஒழிந்த என்ற பொருளில் வரும் மன், தில், ஓ என்னும் சொற்களைத் தொடர்ந்து வருவது ஒழியிசை எச்சமாகும். (எ.கா) கொளலோ கொண்டான்.

## 5. எதிர்மறை எச்சம்

எதிர்மறைப் பொருளை உணர்த்தும் சொல்லைக் கொண்டு முடிவது எதிர்மறை எச்சம். ஏகாரம், ஓகாரம், உம் என்னும் எதிர்மறைப் பொருளைத் தரும்.
(எ.கா) யானே கொள்வேன், யானோ கள்வன், வறனும் உரியன்.

## 6. உம்மை எச்சம்

ஒன்றையொன்று தொடர்புடைய இரு தொடர்களால் அமைவது உம்மை எச்சமாகும். அவ்விரு தொடர்களையும் முடிக்கும் சொல் ஒன்றாகவே வரும். (எ.கா) சாத்தனும் வந்தான்; கொற்றனும் வந்தான்.

## 7. என என் எச்சம்

'என' எனும் எச்சம் வினையைக் கொண்டு முடியும்.
(எ.கா) காரெனக் கறுத்தது.

## 8, 9, 10 ஏனைய எச்சங்கள்

- கூறப்பட்ட ஏழும் தவிர எஞ்சிய மூன்று எச்சங்களும் இறுதியில் நின்று முடிக்கும் சொற்களை உடையவை அல்ல.
- இம் மூன்றும் சொல்பவனுடைய குறிப்பால் எச்சப் பொருளை உணர்த்துவன.
- சொல்லெச்சம் ஒரு தொடருக்கு முன்போ பின்போ ஒரு சொல் மட்டும் எஞ்சி நிற்பது சொல்லெச்சம். ஆனால் அது தொடராய் நின்று எச்சப் பொருள் தருவதில்லை. (எ.கா) உயர்திணை என்மனார்.
- குறிப்பெச்சம்: குறிப்பால் எச்சப் பொருள் தருவது (எ.கா) கைகொல்லும் காஞ்சிரம் காய்த்த வட்டு
- இசையெச்சம்! இசைப் பொருள் எஞ்சி நிற்பது இசையெச்சம் (எ.கா) பகலன் முதற்றே உலகு.

## இடக்கர்ச் சொல்

- நல்லோர் அவையில் கூறத்தகாத இடக்கர்ச் சொற்களை மறைத்துத் தகுதியுடைய வேறு சொற்களால் கூற வேண்டும் (எ.கா) கால் மேல் நீர் பெய்து வருவது.
- மறைத்துச் சொல்ல வேண்டிய இடக்கர்ச் சொற்கள் நீண்டகாலமாக மருவி வழங்கி வருவதும் உண்டு. அச்சொற்களை ஏற்றுக் கொள்ள வேண்டும் (எ.கா) ஆப்பி.

## ஈ, தா, கொடு எனும் சொற்கள்

- ஈ, தா, கொடு எனும் சொற்கள் ஒருவர் ஒருபொருளை இரக்குமிடத்து சொல்லுவதற்கு உரியன. (எ.கா) அரசே சோறு ஈ, உடுக்கை ஈ.
- தா எனும் சொல் ஒத்த நிலையில் உள்ளவனிடம் கேட்பதற்குரியது. (எ.கா) நண்பனே ஆடை தா.
- கொடு எனும் சொல் உயர்ந்தவன் தன்னைவிடத் தாழ்ந்தவனிடம் கேட்பதற்குரியது. (எ.கா) புத்தகம் கொடு.
- கொடு எனும் சொல் படர்க்கை இடத்திற்கு உரியது. எனினும் கூறுபவன் தன்னைப் வேறொருவன் போல கூறுகின்ற போது தன்மை இடத்திற்கும் வரும். (எ.கா) எனக்கு உணவு கொடு.

## இலக்கண வரையறைக்கு உட்படாதவை

1. ஒரு திணைப்பெயர் வேறொரு திணையைக் குறித்து வருவது (எ.கா) கிளியை நங்கை என்பது.
2. திசைச் சொல்லில் பால்பாகு திரிந்து வருவது. (எ.கா) புலையான், பூசையான்.
3. பழமொழிகளில் பொருத்தமில்லாதவற்றைப் பொருத்திக் கூறுவது. (எ.கா) ஊர்க்குயவர்க்குக் கடன்.
4. பொருள் மயக்கம் தரும் வடுக்கதைகளில் திணை முதலானவை திரித்துக் கூறப்படுவது. (எ.கா) அப்பன் சொறியன், ஆத்தாள் சடைச்சி. அவர்கள் பிள்ளையே சர்க்கரைக்கட்டி. – பவளப்பழம்
5. மந்திரங்களைக் கூறும்போது அப்பொருள்களுக்கு உரிமையல்லாத சொற்களைக் கூறுவதும். (எ.கா) நமசிவாய. ந – மண்ணைச் சமைந்தவன், ம – வரதராசன்.

ஆகியவை அனைத்தும் வழக்கமாக வழங்கி வரும் முறைப்படியே வரும். இவற்றிக்கு இலக்கண வரையறை எதுவும் இல்லை.

## செய்யாய் எனும் சொல்

செய்யாய் எனும் வாய்ப்பாட்டால் வரும் முன்னிலை வினைமுற்றுச் சொல்லின் இறுதியில் உள்ள 'ஆய்' என்னும் விகுதி கெட்டுச் செய் என நிற்பதும் உண்டு. (எ.கா) உண்ணாய் – உண், போவாய் – போ.

## ஈ, ஏ எனும் முன்னிலை ஈறுகள்

நிலைமொழியில் முன்னிலை வினைச்சொல் நிற்க வருமொழியில் வரும் ஈகார, ஏகார இடைச்சொற்கள் முன்னிலைமொழிக்கு ஈற்ற மெய்யெழுத்தின் மேல் ஊர்ந்து வரும். (எ.கா) சென்றீ பெரும நின் தகைக்குநர் யாரோ.

## புதிய சொற்கள்

காலத்திற்கு ஏற்பப் புதிதாகத் தோன்றி வழக்கிற்கு வரும் பொருத்தமான சொற்களை, நீக்குதல் கூடாது. ஏற்றுக் கொள்ள வேண்டும். (எ.கா) சன்னல், சட்டி, சமர்.

## குறைச் சொற்கள்

- குறைத்துச் சொல்ல வேண்டிய இடமறிந்து சொற்களைக் குறைத்துச் சொல்ல வேண்டும் (எ.கா) நா மறையாதது - மறையாதது என வந்தது.
- குறைந்து வரும் சொற்கள் முழுச் சொற்கள் உணர்த்தும் பொருளையே உணர்த்தும்.

## இடைச் சொற்கள்

இடைச்சொற்கள் எல்லாம் வேற்றுமைச் சொற்களாகும்.

## உரிச்சொற்கள்

உரிச் சொற்களிலும் பொருள் வேறுபடுத்துவதற்கு உரியன உண்டு. உறு, தவ, நனி - வேறுபடுத்தும் சொற்கள்.

## வினை எச்சங்கள்

வினையெச்சம் முன்பு கூறப்பட்ட இலக்கணமே அன்றி வேறுபல இலக்கணங்களையும் பெற்று வரும். (எ.கா) ஞாயிறு பட்டு வந்தான்.

## தொடர்மொழிகள்

வழக்கில் சேர்ந்து நிற்கக் கூடாத சொற்கள் இணைந்து வருவதும் உண்டு. அவற்றையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். (எ.கா) இப்பானைக்கு இப்பானை சிறிது பெரிது.

## குறிப்பால் உணர்வன

சொல்லால் பொருளின் தன்மையை அறிய முடியும். அவ்வாறு இல்லாமல், சொல்பவனுடைய குறிப்பினால் பொருள் அறியப்படும் சொற்களும் உண்டு. (எ.கா) செஞ்செவி - பொன்னும் மணியும் அணிந்த செவி (செல்வமகள்).

## ஒருபொருள் உணர்த்தும் இருசொற்கள்

பொருள் வேறுபாடின்றி ஒருபொருள்மேல் வரும் பொருள் இரு சொற்கள் பிரிந்து நில்லாமல் தொடர்ந்து வருவது உண்டு. அவற்றையும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

(எ.கா) மீமிசை ஞாயிறு, மீ - மேல், மிசை - மேல்.

## ஒருமை பன்மைக்கு ஆதல்

ஒருமை உணர்த்தும் பெயர்ச்சொல், பன்மையை உணர்த்தி வருவதும் உண்டு. எ.கா, ஏவல் இளையர் தாய் வயிறு கரிப்ப.
தாய் எனும் ஒருமைச் சொல் தாயர் எனும் பன்மைப் பொருள் தந்தது.

## முன்னிலை ஒருமை பன்மையோடு முடிதல்

ஆற்றுப்படைச் செய்யுளில் முன்னிலையால் ஒருமையை உணர்த்தும் சொல் பன்மைச் சொல் கொண்டு முடிந்து வருவதும் உண்டு.
எ.கா, கலம் பெறு கண்ணுளர் ஒக்கல் தலைவ
.......... பதமிகப் பெறுகுவிர்.
தலைவ எனும் ஒருமை, பெறுகுவிர் எனும் பன்மை கொண்டு முடிந்தது.

## சொல்லதிகாரத்திற்குப் புறனடை

செய்யுள் வழக்கிற்கும் உலக வழக்கிற்கும் பொருள் விளங்க கூறப்பட்ட சொற்கள் எல்லாம் கூறப்பட்ட விதிகளுக்குள் அடங்குவதில்லை.

கூறப்பட்ட விதிகளை முன்னோர் நூல்களின் துணைகொண்டு சொல்லின் தன்மையை வரையறை செய்து, வேறுபடுத்தி உணரும் ஆற்றலால் பகுத்துக் காட்ட வேண்டும்.

# வினாக்கள்

1. செய்யுள் ஈட்டச் சொற்கள் யாவை?
2. பொருள்கோளின் வகைகளைச் சுட்டுக?
3. ஒருசொல் அடுக்குகள் எவ்வப் பொருள்களில் வரும்?
4. தொகைச் சொற்கள் எத்தனை வகைப்படும்?
5. உம்மைத் தொகை பொருந்தி வரும் பெயர்கள் யாவை?
6. தொகைகளின் பொருள் இறக்கும் இடங்கள் யாவை?
7. இடக்கர்ச் சொல்லைக் கூறும் முறை யாது?
8. இரத்தல் பொருளில் வரும் சொற்கள் யாவை?
9. பாரிப்பப் பாரியாப் பெயர்கள் யாவை?
10. கடிசொல் இல்லைக் காலத்துப் படினே — விளக்குக.
11. சொற்களில் குறைத்துக் கூறும் இடங்கள் யாவை? சான்றுடன் விளக்குக?
12. செய்யுளுக்குரிய நால்வகைச் சொற்கள் பற்றி விளக்குக.
13. அறுவகைச் செய்யுள் விகாரங்களைச் சான்று காட்டி நிறுவுக.
14. நால்வகைப் பொருள்கோள்களை எடுத்துக்காட்டின் வழி விளக்குக.
15. சொல்லடுக்குகள் குறித்துத் தொல்காப்பியர் கூறும் கருத்துக்கள் யாவை?
16. எச்சவியல் கூறும் வினைமுற்றின் இலக்கணத்தை விளக்குக.
17. இலக்கண வரையறைக்கு உட்படாத வழக்குகள் யாவை?
18. எச்சவியல் கூறும் தொகைச் சொற்கள் பற்றி ஒரு கட்டுரை வரைக.
19. பத்துவகை எச்சங்களைத் தக்க சான்று காட்டி நிறுவுக.
20. மரபிலக்கணத்தின் ஒழிபாக எச்சவியல் கூறும் செய்திகளைத் தொகுத்தெழுதுக.
21. எச்சவியல் கூறும் செய்யுள் ஒழிபுகளைத் தொகுத்தெழுதுக.